அரசு கலைக் கல்லூரி [தன்னாட்சி], கோவை - 18

தமிழ்த் துறை

இளங்கலை - அறிவியல், வணிகவியல்

முதலாமாண்டு - இரண்டாம் பருவம்

பகுதி - I - தமிழ் - தாள் - II 18TAM21L

[2018 - 2021]

[விருப்பம் - செய்யுள், உரைநடை - மொழித்திறன் - படைப்பாற்றல்]


தொகுப்பாசிரியர்கள்

[கௌரவ விரிவுரையாளர்கள்]

அலகு : I - முனைவர் ப. கீதா

அலகு : II - முனைவர் ப. வித்தியாவதி

அலகு : III - முனைவர் ப. வித்தியாவதி

அலகு : IV - முனைவர் அ. ரேவதி

அலகு : V - முனைவர் ப. கீதா.

அரசு கலைக் கல்லூரி [தன்னாட்சி], கோவை - 18.

முதலாமாண்டு இளங்கலை, அறிவியல், வணிகவியல்

பகுதி - I தமிழ்ப்பாடத் திட்டம் [2018 - 2021]

இரண்டாம் பருவம் - தமிழ் - தாள் - II

[விழுமியம் - செய்யுள், உரைநடை - மொழித்திறன் - படைப்பாற்றல்]

## அலகு : I. செய்யுள்

அ

1. தேவாரம் - திருஞானசம்பந்தர் - திருப்பிரமபுரம் பதிகம் [1-11 பாடல்கள்]
2. திருவாசகம் - மாணிக்கவாசகர் - திருக்கோத்தும்பீ [1-10 பாடல்கள்]
3. நாலாயிர திவ்வியப் பிரபந்தம் - பெரியாழ்வார் திருமொழி [கண்ணன் திருவவதாரச் சிறப்பு 1-10 பாடல்கள்]

ஆ

4. திருமந்திரம் - திருமூலர் வைராக்கியம் (1-10 பாடல்கள்)
5. திருவருட்பா - வள்ளலார் - அருள் விளக்க மாலை (1-5 பாடல்கள்)

## அலகு : II. செய்யுள்

அ

1. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் - குமரகுருபரர் - செங்கீரைப் பருவம், (சிற்றிற்பருவம், வருகைப் பருவம், அம்புலிப் பருவம்]
2. பராபரக்கண்ணி - தாயுமானவர் [10 பாடல்கள்]
3. தேம்பாவணி - வீரமாமுனிவர் - [மகன் நேர்ந்த படலம்] [1 - 19 பாடல்கள்]

ஆ

4. உமர்கய்யாம் பாடல்கள் (47, 57, 58, 60, 74, 85, 111, 112, 113, 114]
5. திருக்குற்றாலக் குறவஞ்சி - திரிகூட ராசப்பக் கவிராயர் [திருக்குற்றால நாதர் உலா வருதல் - வசந்தவல்லி பந்தாடல்]

## அலகு : III உரைநடை

கிராமம் நகரம் மாநகரம் - ஆசிரியர் முத்துக்குமார்.

## அலகு : IV மொழித்திறன்

அ

1. இலக்கணம் - 1. தொகைநிலைத் தொடர், தொகாநிலைத்தொடர்

2. உரைகள் - 1. வானொலிச் சிற்றுரை

2. நேர்முக வர்ணனை

3. நேர்காணல்

ஆ

4. விவாதம்

5. கலந்துரையாடல்

3. இலக்கிய வரலாறு

அ. 1. சிற்றிலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

2. பக்தி இலக்கியங்கள் - சைவம், வைணவம், கிறித்துவம், இஸ்லாம்.

ஆ. 3. உரைநடையின் தோற்றமும் வளர்ச்சியும்

## அலகு : V படைப்பாற்றல்

1. அ. கற்பனைச் சந்திப்புகள் :

[எ-கா] வாரியாரும் பெரியாரும், பொற்கைப் பாண்டியனும், மனுநீதிச் சோழனும், கக்கனும் காமராசரும், காந்தியடிகளும் இன்றைய அரசியல் தலைவர்களும், கட்டபொம்மனும் ஜாக்ஸன் துரையும், வின்சன்ட் சர்ச்சிலும் காந்தியும், அப்துல்கலாமும் நெல்சன் மண்டேலாவும் - வேலுநாச்சியாரும், இந்திரா காந்தியும் - சுபாஷ் சந்திர போசும் விவேகானந்தரும், கட்டபொம்மனும், திருப்பூர் குமரனும்.

2. ஆ. நெருக்கடிநிலைமைகளைத் திறமையாகக் கையாளுதல்

(எ-கா) வெளியூர்ப்பயணம் - பயணச்சீட்டு கிடைக்காத நிலையில் வரும் நெருக்கடி, கல்விநிலையம் - விரும்பிய பாடப்படிப்பில் சேர முடியாத நிலையில் வரும் நெருக்கடி.

3. 1. பல்வகை விண்ணப்பங்கள் [அலுவலக நிலை]

2. பல்வேறு மடல்கள் [பொதுவான நிலை].

# அலகு - I

## அ. செய்யுள்

அ.

1. தேவாரம் - திருஞானசம்பந்தர் - திருப்பிரமபுரம் பதிகம்
[1 - 11 பாடல்கள்]

2. திருவாசகம் - மாணிக்கவாசகர் - திருக்கோத்தும்பீ
[1 - 10 பாடல்கள்]

3. நாலாயிர திவ்வியப்பிரபந்தம் - பெரியாழ்வார் திருமொழி.
[கண்ணன் குழலூதும் சிறப்பு : 1 - 10 பாடல்கள்]

ஆ

4. திருமந்திரம் - திருமூலர் சிவபரத்துவம் [1 - 10 பாடல்கள்]

5. திருவருட்பா - வள்ளலார் - அருள் விளக்க மாலை
[1 - 5 பாடல்கள்.

## 1. திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த தேவாரப் பதிகம்

### முதல் திருமுறை - திருப்பிரமபுரம்

**தேவாரம்** : தே + வாரம் ; தே - தெய்வம், வாரம் - இன்னிசைப் பாட்டு தெய்வத்தைப்பற்றிய இன்னிசைப் பாடல். தே + ஆரம் எனப்பிரித்துத் தெய்வத்திற்கு அணியும் பூமாலை போன்ற பாமாலை என்றும் கூறலாம், ஆரம் - மாலை.

சைவ நாயன்மார்களுள் சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் என்னும் மூவரும் இறைவனைத் துதித்துப் பாடிய பாடல்கள் 'தேவாரம்' என்று வழங்கப்படுகின்றன. சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் இவை முதல் ஏழு திருமுறைகளாய் அமைந்துள்ளன.

**ஆசிரியர் வரலாறு** :

சீர்காழியில் அந்தணர் குலத்தில் சிவபாத இருதயர்க்கும் பகவதி அம்மையார்க்கும் மகனாகப் பிறந்தார். மூன்று வயதில் உமையம்மையாரின் ஞானப்பால் உண்டு இறைவன் மீது "தோடுடைய செவியன்" என்று தொடங்கும் பாடலைப்பாடினார்.

அன்று முதல் பல்வேறு சிவத்தலங்களுக்குச் சென்று அங்கு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் மீது இசையுடன் கூடிய பாடல்களைப் பாடினார். இவருடைய பாடல்கள் பன்னிரு திருமுறையில் முதல் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டன. இவர் 16,000 பதிகங்கள் பாடினார் என்று கூறுவர். ஆனால் இப்பொழுது கிடைத்திருப்பவை 384 பதிகங்கள் மட்டுமே. பதிகம் என்பது பத்து அல்லது பதினொரு பாடல்களைக் கொண்டதாகும். " நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன் " என்று சுந்தரரால் போற்றப்படுபவர். ஆதிசங்கரர் இவரைத் "திராவிட சிசு" என்று கூறியுள்ளார்.

பாடல் விளக்கம் :

**1.** தோடு என்னும் அணியை அணிந்துள்ள, உமாதேவியை இடப்பாகம் உடைய சிவபெருமான் இடபவாகனத்தில் ஏறி, தூய வெண்மதியைச் சூடி திருவெண்ணீறு மேனியில் பொலிய என் உள்ளத்தைக் கவர்ந்தவன். அப்பெருமான், ஒரு காலத்தில் நான் -முறையிட வழிபாட்டினை ஏற்று அருள் செய்தவன். அவனே எனக்குக் காட்சி தந்தருளியவன். அவன் இவனே அல்லவா!

**2.** ஆமையோடு, நாகம் முதலானவைகளை ஆபரணமாகக் கொண்டு திருவோடு ஏந்தி பிச்சை கொள்ளும் சிவபெருமான், என் உள்ளத்தைக் கவர்ந்தவன். நல்ல நூல்களைக் கற்றுத் தேர்ந்தவர் -களும், கேள்வி ஞானம் பெற்றவர்களும், திருத்தொண்டு செய்யும் பெருமக்களும் கரங்குவித்து வணங்கி நிற்க இடப வாகனத்தில் காட்சி தரும் பெருமான் இவனல்லவா?

**3.** கங்கை தங்கும் சடையில் குளிர்ந்த வெண்ணிலவைச் சூடி அழகிய வளைகள் கைகளிலிருந்து நழுவிச் செல்லுமாறு என் உள்ளத்தையும் மேனியையும் உருகச் செய்து கவர்ந்தவன் சிவபெருமான். உலகிலுள்ள உயிர்கள் யாவும் பிரளய காலத்தில் அழிந்தாலும், அழியாது எப்போதும் நிலவும் பிரமபுரத்தில் இருக்கும் பெருமான் இவனல்லவா.

**4** வானத்தில் பறந்து சென்று துன்புறுத்தும் தன்மையில் மகிழ்ச்சி கொண்ட முப்புரக் கோட்டைகளை எரித்ததும் அன்றி,

பிரமனுடைய கபாலத்தைப் பிச்சைப் பாத்திரமாகக் கொண்டு
பிச்சையேற்று என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு,
அரவமும் கொன்றை மலரும் மார்பினில் பொலிய உமாதேவியை
மகிழ்ந்து இடப்பாகத்தில் வைத்து பிரமாபுரம் மேவிய பெருமான்
இவனல்லவா!

5. ஒரே வடிவத்தில் பெண்ணுருவும் ஆணுருவும் கொண்டு
இரு உருவங்களைக் காட்டுபவனாகி, சடை முடியுடன் இடபத்தில்
அமரும் சிவபெருமான் அருமையான உரைகளைச் சொல்லும்
பொருட்டு எனது உள்ளம் அமர்ந்து என்னைக் கவர்ந்தவன்.
ஊழிக் காலத்திலும் அழியாத பெருமையுடைய பிரமாபுரம்
மேவிய பெருமான் இவனல்லவா!

6. வேத ஒலி முழங்க, பாடலுடன் ஆடலும் செய்து மழு
ஏந்தி இருப்பவன் ஈசன். அவன் என்னுடைய கைகளில் உள்ள
வளைகள் தாமே கழன்று விழும்படி என் உள்ளத்தைக்
கவர்ந்து உருகச் செய்தவன். அடர்ந்த சோலைகள் திகழ்ந்து
நறுமணம் வீச நிலவின் தன்மையுடைய பிரம்மபுரத்தில் மேவிய
பெருமான் இவனல்லவா!

7. சடையில் கங்கையும் கரத்தில் நெருப்பும் ஒளிர்ந்து
பெருமை கொள்ளவும். நாகமானது இறுகப் பற்றி உடலின்
மீது திரியவும் காட்சி தந்து என் உள்ளத்தைக் கவர்ந்த
சிவபெருமான். உப்பங்கழி பொருந்திய சோலையில்
அன்னப் பறவைகள் தம் பேடைகளுடன் சுவையுள்ள பிரமா
-புரத்தில் இருப்பவன். அவன் இவனல்லவா!

8. சினத்தின் வயப்பட்டு வீரத்தைக் காட்டும் வகையில்
கயிலையைப் பெயர்த்த இலங்கை அரசனுடைய வலிமையை
அழித்து எனது உள்ளத்தைக் கவர்ந்த ஈசன், வினையின்
கன்மத்தைச் சேர்த்துத் துயரை விளைவிக்கும் இந்த உலகில்
ஊழிக் காலத்திலும் அழியாமல் நிலைத்து நின்று தனது
சிறப்பினை நல்கும் பதியாகிய பிரமபுரத்தில் மேவியவன்.
அவன் இவனல்லவா!

9. திருவடியைக் காணத் திருமாலும் திருமுடியைக் காணப்
பிரமனும் முயற்சி செய்ய, அவர்கள் செயல் பயனற்றதாகச்

செய்யும் வகையில் நீண்டு வளர்ந்தவனாகிய ஈசன் எனது உள்ளத்தைக் கவர்ந்தவன். வாள் போன்ற நெற்றியை உடைய மகளிர் முதலாக உலகத்தவர் அனைவரும் ஏத்தப் பேணிக் காக்கும் பிரமாபுரம் மேவிய பெருமான் இவன் அல்லவா!

**10.** புலன் உணர்வுகளை நீத்த புத்தரும் சமணரும் நன்னெறி-யில் அமையாத மாற்றுக் கருத்துக்களைக் கூறிடினும் நிந்தைபெற்று எனது உள்ளத்தைக் கவர்ந்து. செருக்குற்ற யானையை அழித்து அதன் தோலைப் போர்வையாக்கிக் கொண்டு பின்னர் மானை காயடிப் பித்தனைப் போன்று பிரமாபுரம் மேவிய பெருமான் இவனல்லவா!

**11.** மறைவல்ல பிரமன் பூசித்த பிரமாபுரம் மேவிய பெருமானை ஒன்றிய மனத்தினால் உணர்ந்து ஞானசம்பந்தன் உரைத்த திருநெறிய இத்தமிழ்ப் பதிகத்தை ஓதவல்லவருடைய தொல்வினை எளிதாகத் தீரும்.

## வினாக்கள்.

### ஒருவரிகளில் விடையளி :

1. சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் முதல் ஏழு திருமுறைகள் எது?
2. திருஞானசம்பந்தரின் பெற்றோர் யாவர்?
3. "தோடுடைய செவியன்" யார்?
4. "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்" என்று கூறியவர் யார்?
5. ஆதிசங்கரரால் "திராவிட சிசு" என்றழைக்கப்பட்டவர் யார்?

### குறுகிய விடையளி :

1. தேவாரம் - சிறுகுறிப்பு வரைக.
2. திருஞானசம்பந்தன் - குறிப்பு வரைக.

### விரிவான விடையளி :

1. திருஞானசம்பந்தர் சிவபெருமானை போற்றிப் பாடும் பாங்கினைத் தொகுத்துரைக்க.

## 2. திருவாசகம் - மாணிக்கவாசகர்

## திருக்கோத்தும்பி

**நூல் குறிப்பு :**

மாணிக்கவாசகர் பாடிய நூல்கள் திருவாசகமும், திருக்கோவையாரும் ஆகும். இவை எட்டாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளன. திருவாசகம் சிவபுராணம் முதல் அச்சோப்பதிகம் ஈறாக 51 பகுதிகளைக் கொண்டது. 659 பாடல்களை உடையது. "திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்ற பழமொழி திருவாசகத்தின் பெருமையை உணர்த்தும். டாக்டர் ஜி.யூ.போப் ஆங்கிலத்தில் திருவாசகத்தை மொழிபெயர்த்துள்ளார்.

**ஆசிரியர் குறிப்பு :**

பாண்டிய நாட்டில் உள்ள திருவாதவூரில் அந்தணர் குலத்தில் பிறந்தவர் மாணிக்கவாசகர். இயற்பெயர் தெரியவில்லை. திருவாதவூரில் பிறந்தமையால் இவரைத் 'திருவாதவூரார்' என்றழைப்பர். கி.பி. 9-ஆம் நூற்றாண்டினர். இவர் அரிமர்த்தன பாண்டியனின் அமைச்சரானார். 'தென்னவன் பிரமராயன்' என்ற பட்டமளித்துச் சிறப்பித்தான் பாண்டியன் அரசனின் ஆணைப்படி குதிரை வாங்கச் சென்றவர் திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் இறைவனே ஞானாசிரியனாக வந்து போதிக்கும் வாய்ப்பைப் பெற்றார். அப்போதே துறவு பூண்டு ஆலயத் திருப்பணிக்கும் அடியார்களுக்கும், பாண்டியன் குதிரை வாங்கக் கொடுத்த பொன்னைச் செலவிட்டார். இதனை அறிந்த பாண்டியன் பல தண்டனைகளைக் கொடுத்தான். ஆண்டவன் நரிகளைப் பரிகளாக்கியும், பரிகளை நரிகளாக்கியும் பிட்டுக்கு மண் சுமந்தும் பல திருவிளையாடல்களை மாணிக்கவாசகருக்காகச் செய்தான். இவர் பாடல்கள் அனைத்தும் நெஞ்சுருக்கும் பாடல்கள்.

நம் பாடப்பகுதி "திருக்கோத்தும்பி". கோத்தும்பியை நோக்கிக் கூறுவதாக அமைந்த பகுதியாதலால் இது 'திருக்கோத்தும்பி' எனப் பெயர் பெற்றது. கோ - அரசு. தும்பி - வண்டு. கோத்தும்பி - அரசவண்டு சிவபெருமானைத் தலைவனாகப் பெற்ற தலைவி அப்பெருமான் தன்னை உடன் கொண்டு செல்லாது பிரிந்த பிரிவின் கண் ஆற்றாளாய் வண்டினை நோக்கிக் கூறுவதாக அமைந்தது இப்பகுதி. இது தில்லையில் அருளிச் செய்யப்பட்டது

# திருக்கோத்தும்பி

## பாடல் விளக்கம் : 1.

செந்தாமரை மலரில் எழுந்தருளியிருக்கும் படைப்புக் கடவுளாகிய நான்முகனும், தேவேந்திரனும், அழகு பொருந்திய நாமகளும், திருப்பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் காக்கும் கடவுளாம் திருமாலும், நான்கு மறைகளும், சந்திரன், கதிரவன், நெருப்பு ஆகிய பெருமைமிக்க முச்சுடர்களும், மற்றுமுள்ள தேவரும் தாம் அறியவியலா, வெள்ளேற்றின் மேல் ஏறுகின்ற சிவபெருமானின் திருவடி மலர்களில் சென்று, அரசவண்டே! நீயும் ஊதுவாயாக!

## பாடல் விளக்கம் : 2.

வானவர்க்கும் தலைவனாகிய சிவபெருமான், என்னை ஆட்கொள்ளாமல் விட்டிருப்பானேயாகில், நான் தான் யாரோ? எனது உள்ளந்தான் எப்படிப்பட்டதோ? என் அறிவுக் கூறுகள் தாம் எப்படிப்பட்டனவோ? என்னையுமே யாரறிவார்? என்னை மதிப்பவரும் எவருமில்லை. ஊனால் பொருந்திய உடைபட்ட மண்டையோட்டில் பிச்சை எடுக்கச் செல்கின்ற, பொன்னம்பலத்தில் உறைபவனாகிய சிவபெருமானின் தேன் சொரிகின்ற தாமரை திருவடிகளில் சென்று. அரசவண்டே! நீயும் ஊதுவாயாக

## பாடல் விளக்கம் : 3

தினையளவாகிய மிகவும் சிறிய மலருக்குள் நுழைந்து, இனிமேலும் தேன் பருகாதே! நினைக்கும் போதும், காணும் போதும், பேசும் போதும், எந்நேரமும் உடலில் உள்ள எல்லா எலும்புகளும் உள்ளே நெகிழ்ச்சி அடையுமாறு ஆனந்தத் தேனைச் சிந்தும் கூத்தினை உடையவனாகிய சிவபெருமானின் திருவடி மலர்களுக்கே சென்று, அரசவண்டே! நீயும் ஊதுவாயாக!

## பாடல் விளக்கம் : 4

திண்ணனாகிய கண்ணப்பனையொத்த அன்பெனும் பண்பானது என்னிடத்தில் இல்லாமை என்பதைக் கண்ட பின்னரும், என்னுடைய அப்பனாகிய சிவபெருமான் என்னையும் ஏப்பி, என்னையும் தன் அடிமையாக்கிக் கொண்டான். அருள் வழங்கி, நன்னெறியில் செல்லப் பணித்தான். என்னைத் தன்னிடம் வருகவென்று அழைத்துக் கொண்டான். மேலான கருணையுள்ளம் கொண்டவன் அவன். திருநீற்று மேனியனாய்த் திகழ்பவன் அவன். அத்தகையவனின் திருவடி மலர்களைச் சென்றடைந்து அரசவண்டே! நீயும் ஊதுவாயாக!

## பாடல் விளக்கம் : 5

'அந்தத் தெய்வமே தெய்வம்! அவரே தெய்வம்!' என்று இவ்வாறெல்லாம் பொய்த் தெய்வங்களைப் பேசிப் புலம்புகின்ற இவ்வுலகில், நானோ இத்தெய்வங்களிடத்தே சிறிதும் பற்றுக் கொள்ளாமல், என் பற்றுகள் அனைத்தும் விலகிட, நான் பற்றி நின்ற மெய்த்தெய்வம், மேலான தெய்வம் சிவபெருமானின் திருவடி மலர்களில் சென்று, அரசவண்டே! நீயும் ஊதுவாயாக!

## பாடல் விளக்கம் : 6

சேர்த்து வைத்த செல்வம், கொண்ட மனையாள், மக்கட்செல்வம், சுற்றிய

இடம், கற்ற கல்வி என்னும் இவை யாவும் மருண்ட இவ்வுலகில், பிறப்பென்னும் இறப்பென்னும் மனக்கலக்கத்தினைத் தெளிவுறுத்திய மெய்ஞ்ஞான வடிவினனாகிய சிவபெருமானிடம் சென்று, அரசவண்டே! நீயும் ஊதுவாயாக!

**பாடல் விளக்கம் : 7**

உள்ளத்திற்குத் தெவிட்டாத அமுதமாம் நலஞ்செய்கின்ற கூத்தனாகிய சிவபெருமானை எண்ணிட, எனக்குத்தான் இடும்பும் உண்டோ? நாயேனாகிய அடியேன், அவனுடைய அழிவற்ற திருவடிகளை மறக்கத்தான் கூடுமோ? அந்தச் செம்மானாகிய மெய்மானோடு பொருந்திய பாவியராகிய அடியவர்களும் உருவங்களைத்தான் நானும் பார்க்கக் கூடுமோ? எனவே, மேலானவர்க்கும் மேலானாகிய சிவபெருமானின் திருவடி மலர்களைச் சென்றடைந்து அரசவண்டே! நீயும் ஊதுவாயாக!

**பாடல் விளக்கம் : 8**

பரம்பொருள், தானே ஒரு பொருளாய் முளைத்து நின்று, எண்ணில் பல கிளைகள் விட்டு, எங்கெங்கும் பரவி நிலைத்தவன். என்னை நன்றாக நிலைபெறச் செய்தவன். நாயைப் பல்லக்கில் ஏற்றுவித்ததைப் போன்று, நல்லடியார் நடுவுள் என்னை இருக்கச் செய்தவன். அவன் எனக்குத் தந்தை; என் தந்தைக்கும் தாய்க்கும் தந்தை. அந்தப் பெருமான், குறைவிலாத செல்வம் உடையவன். அத்தகையவனுக்கே, அவனிடம் சென்று அரசவண்டே! நீயும் ஊதுவாயாக!

**பாடல் விளக்கம் : 9**

காரணங்கள் எல்லாவற்றையும் கடந்துநின்ற கண்டம் கறுத்தவன் அவன். அவனுடைய பொன்னார் திருவடிகளைச் சென்றடைந்த பின்னரே தான், எனக்கு இறப்பு – பிறப்பு என்னும் இவை இரண்டைப் பற்றிய பிணக்கம் தீர்ந்தது. எனது பிணக்கத்தைத் தீர்த்த கருணைக் கடலாகிய எம்பெருமானின் திருவடி மலர்களை அடைந்து அரசவண்டே! நீயும் ஊதுவாயாக!

**பாடல் விளக்கம் : 10**

நோய்வாய்ப்பட்டு, முதுமையடைந்து, நடக்கவியலாமல் தாய்ப்பசுவால் தள்ளப்படுகின்ற கன்றினைப் போல, நான் இவ்விடத்தில் இருந்தேன். நாயானது தான் பெற்ற பொற்செல்வத்தை அறிந்துகொண்டு விரும்புவதில்லை. அதைப் போன்றே அருட்செல்வத்தின் அருமையை அறிந்து விரும்பாதவனாக அடியேன் இருந்து வந்தேன். அத்தகைய நாயடியேனைத் தாயின் தண்ணருள் கொண்டபடி என்னை வந்து ஆண்டு கொண்டான். அந்தச் செல்வன் சிவபுரத்தானின் திருவடிகளைச் சென்றடைந்து தும்பியரசே! நீயும் ஒலியெழுப்பிப் பாடுவாயாக

## வினாக்கள்

**ஓரிரு சொற்களில் விடையளி :**

1. திருவாசகத்தை இயற்றியவர் யார்?
2. மாணிக்கவாசகர் எம்மன்னரிடம் அமைச்சராய் பணியாற்றினார்?
3. மாணிக்கவாசகர் பெற்ற பட்டம் யாது?

4. திருவாசகத்தை மொழிபெயர்த்தவர் யார்?

5. திருக்கோத்தும்பி என்பதன் பொருள் யாது?

## இருகிய விடையளி :

1. மாணிக்கவாசகர் இயற்றிய நூல்கள் எவை?

2. மாணிக்கவாசகர் ஆசிரியர் குறிப்பு வரைக.

3. திருவாசகம் குறிப்பு வரைக.

## விரிவான விடையளி :

1. மாணிக்கவாசகர் எம்பெருமானின் திருவடிகளாகிய மலர்களில் சென்று திருக்கோத்தும்பியை நுகருமாறு உரைப்பனவற்றை விளக்குக

# 3. நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

## பெரியாழ்வார் திருமொழி.

[கண்ணன் வேய்ங்குழலாகிய சிறப்பு எண்சீர் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்]

## நூற்குறிப்பு :

பன்னிரு ஆழ்வார்களும் திருமாலின் அழகில், அருளில் மயங்கிப் பல பாடல்கள் பாடினர். ஆழ்வார்களின் காலத்திற்குப் பின் வந்த நாதமுனிகள் ஆழ்வார்கள் பாடிய பாடல்கள் அனைத்தையும் தொகுத்தார். அவை, " நாலாயிர திவ்வியப் பிரபந்தம் " என அழைக்கப்பட்டு

## ஆசிரியர் குறிப்பு :

பாண்டிய நாட்டு ஸ்ரீவில்லிப்புத்தூரில் பிறந்தவர். இயற்பெயர் விஷ்ணு சித்தர். பட்டர்பிரான், புதுவை மன்னன், வேயர் குலத்துத் தலைவராய்த் திகழ்ந்த பெற்றாசிசுர் என்றும் கூறுவர். ஆண்டாளை வளர்த்தவர். கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி ஆகிய நூல்களைப் பாடியவர். கண்ணனைக் குழந்தையாகப் பாவித்து இவர் பாடிய பாடல்கள் பிள்ளைத் தமிழ் எனும் தனியொரு இலக்கியம் உருவாகக் காரணமாக அமைந்தது. மதுரை மன்னன் வல்லபதேவனிடம் வைணவத்தின் சிறப்பை நிலை நாட்டிப் " பொற்கிழி " பெற்றவர்.

### 1. குழலிசையில் மயங்கிய கோவலர் சிறுமியர்

## பாடல் விளக்கம் :

நாவலந்தீவில் வாழும் நங்கையர்களே! - கண்ணின் குழலிசை கேட்டு - ஆயர் சிறுமியர் - தம் இளம் கொங்கைகள் கண்ணனைக் காண நாங்கள் முன்னே செல்கிறோம் என்று மகிழ்ச்சி பெற நிலை பெற்றனர்.

## 2. கோவிந்தன் குழலூதியதன் விளைவு.

பாடல் விளக்கம் :

கண்ணன் குழலூதியதைக் கேட்டு — மயில் போன்ற சாயலையும் — மான்போன்ற கண்களையும் உடைய ஆய்க்குலப் பெண்கள் — தங்களின் ஆடை நெகிழ — ஒரு கையாலே அதனைப் பிடித்துக் கொண்டிருக்க, தங்களின் கூந்தல் அவிழ — கண்ணனைக் காண நின்றனர்.

## 3. வாசுதேவன் நந்தகோன் இளவரசு

பாடல் விளக்கம் :

வாசுதேவனின் குமரன் குழலிசை கேட்டு — தேவலோகத்து இளமகளிர் வந்து குவிந்தனர் — மனம் உருகினர் — அவர்கள் கண்கள் பனிப்ப — நெற்றி வியர்க்க — கூந்தல் அவிழ்ந்து அலைய — தலைப்பூ விழத் தேனும் துளித்தது.

## 4. குழலிசையில் மயங்கிய அரம்பையர்

பாடல் விளக்கம் :

கண்ணன் குழலோசை கேட்டு — மேனகை, திலோத்தமை, அரம்பை, ஊர்வசி ஆகிய தேவலோக நடனமங்கையர் மயங்கினர். அவர்கள் தங்கள் தாழ்ச்சியாலே வெட்கமடைந்து — வானத்திலும், பூமியிலும் வாய் திறந்து பாடவோ ஆடவோ மாட்டோம் என்றனர்.

## 5. குழலோசை கேட்ட தும்புரு நாரதர் நிலை

பாடல் விளக்கம் :

கண்ணன் ஊதிய குழலிசை கேட்டு — நல்ல நரம்புகளையுடைய வீணையை வாசிக்கும் தும்புரு நாரதர் தங்கள் வீணை வாசிப்பை மறந்தனர். கின்னரம், மிதுனம் என்று பெயர் பெற்றுள்ள தேவசாதியினரும் கின்னரத்தை இனித் தொடமாட்டோம் என்று கூறினர்.

## 6. குழலிசையில் மயங்கிய தேவர்களின் நிலை

பாடல் விளக்கம் :

கண்ணனின் குழலோசையைக் கேட்ட தேவர்கள் தம் அவிர்ப்பாக உணவை மறந்து, ஆய்ப்பாடி நிரம்ப வந்து நெருங்கித் தத்தம் செவி -களையே நாவாகக் கொண்டு குழலோசையின் இனிமையை நன்கு அனுபவித்தனர்.

## 7. குழலிசையில் பறவைகளும் கறவைகளும் மயங்கின

பாடல் விளக்கம் :

கண்ணன் குழலோசையைக் கேட்டு அங்கு வந்து சேர்ந்த

பறவைக் கூட்டங்கள் கண்ணனையே சூழ்ந்து கொண்டு வெட்டி வீழ்த்திய காடு போல அசையாமல் இருந்தன. பசுக்கூட்டங்கள் தம் கால்களைப் பரப்பியபடியே தம் தலைகளைத் தாழ்த்திக் கொண்டு தம் காதுகளை அசைக்காமல் கேட்டுக் கொண்டிருந்தன.

## 8. குழலிசை கேட்ட மான்களின் நிலை

பாடல் விளக்கம் :

கண்ணனின் குழலிசை கேட்ட மான்கள் - அவை தன் அறிவை இழந்து மேய்ச்சலையும் மறந்தன. அம்மான்கள் வாயில் கவ்விய புல்லும் கடைவாய் வழியே நழுவிக் கீழே விழ முன் பின் அசையாமல் சித்திரம் போல் நின்றன.

## 9. குழலிசை கேட்ட மரங்களின் செயல்

பாடல் விளக்கம் :

கண்ணன் குழல் ஊதின போது, மரங்கள் ஒருபடி பட்டு உள்ளுருகித் தேன் தாரைகளைப் பொழிந்தன - மலர்கள் சிந்தின - கொம்புகள் தலை தாழ்ந்தன.

## 10. சாதுக்களின் கோஷ்டியில் சேர்வர்

பாடல் விளக்கம் :

கண்ணனின் குழலிசையைப் பற்றி ஸ்ரீவில்லிபுத்தூருக்குத் தலைவனான பெரியாழ்வார் விரிவாகக் கூறியருளிய இத்தமிழ்ப் பாசுரங்களை ஓதவல்லவர்கள் கனிந்த பேச்சை உடையவராய் - சாதுக்களின் கூட்டத்திலே சிறந்தவராகக் கொண்டாடப்படுவர்.

## வினாக்கள்

ஓரிரு சொற்களில் விடையளி :

1. பிள்ளைத்தமிழ் பருவங்கள் எத்தனை ?
2. பிள்ளைத்தமிழ் பாடல்களுக்கு வித்திட்டவர் யார் ?
3. பெரியாழ்வாரின் காலம் எது?

குறுகிய விடையளி :

1. ஆழ்வார்கள் அருளிச் செய்த நூல் தொகுப்பின் பெயர் யாது ?
2. பெரியாழ்வார் இயற்றிய நூல்கள் யாவை?
3. கண்ணனின் குழலோசை கேட்ட மரங்களின் செயல்கள் யாவை ?

விரிவான விடையளி :

1. கண்ணனின் வேய்குழல் கானம் கேட்ட உயிரினங்களின் நிலைப்பாட்டை எடுத்துரைக்க.
2. கண்ணனின் வேய்குழல் இனிமையை பெரியாழ்வார் எங்ஙனம் எடுத்துரைக்கின்றார் ?

## ஆ. 4. திருமந்திரம் - முதல் தந்திரம்

### சிவ பரத்துவம்.

**நூற்குறிப்பு :**

திருமந்திரம் சைவத் திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாகும். இதனை அருளியவர் திருமூலர். திருமந்திரத்தில் மூவாயிரமும் ஒன்பது தந்திரங்களும் உள்ளன. தந்திரம் என்பது ஒரு நூலைப் பொறுத்த வரையில் நூலின் உட்பிரிவு ஆகும். இயல், படலம், காதை, சருக்கம் என்பவை போல 'தந்திரம்' நூலின் உட்பிரிவு.

**ஆசிரியர் குறிப்பு :**

திருமூலர் காலத்தால் முந்தியவர். இவர் ஐந்து அல்லது ஆறாம் நூற்றாண்டைச் சார்ந்தவர். தமிழகத்தில் தோன்றிய முதல் சித்தர். கூடுவிட்டு கூடுபாயும் ஆற்றலுடையவர். "மூலன் என்ற மாடு மேய்ப்பவன் இறக்கப் பசுக்கூட்டங்களின் கண்ணீரைக் கண்டு தம் மூலன் உடம்பில் புகுந்து வாழ்ந்தவர். 3000 பாடல்கள் பாடியுள்ளார்.

### சிவபரத்துவம்

**பாடல் விளக்கம் : 1.**

சிவபெருமானைவிட வேறு தெய்வம் இல்லை - உவமையாய்க் கூறத்தக்கவரும் இல்லை - அண்டத்தைக் கடந்து பொன் போல் ஒளிர்பவன் - சகசிரதளத் தாமரையில் விளங்குபவன்.

**பாடல் விளக்கம் : 2.**

சிவபெருமானைவிட மேன்மையுடைய தேவர் எவரும் இல்லை - அரிய தவமும் இல்லை - அவனையே அல்லாது நான்முகன், திருமால், உருத்திரன் என்னும் மூவராலும் அடைவது ஒன்றும் இல்லை - அவனை -யல்லாது முக்தி அடைவதற்குரிய வழியும் அறியேன்.

**பாடல் விளக்கம் : 3.**

பொன் போல் சகசிரதளத்தில் விளங்குபவன் - மூவர்க்கும் பழமையானவன் - தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன் - அப்பா என்றழைத்தால் தந்தையாகி உதவுபவன்.

**பாடல் விளக்கம் : 4**

தீயைவிட வெம்மை உடையவன் - நீரைவிடக் குளிர்ந்தவன் - குழந்தையை விட நல்லவன் - பக்கத்தே விளங்குபவன் - தாயைப் போல் அருள் செய்பவன்.

**பாடல் விளக்கம் : 5**

பொன்னால் இயற்றப்பட்ட சடை என்னும் சொல்லும்படி பின்புறம் விளங்க விளங்குபவன் - திருநாமம் நந்தி என்பதாகும் - உயிர்கட்கு எல்லாம் தலைவன்.

பாடல் விளக்கம் : 6

தொலைவிலும் பக்கத்திலும் எமக்கு முன்னவனான இறைவனின் பெருமையை நினைக்கின் அவருக்கு ஒப்பான தெய்வம் இல்லை - முயற்சியும் அதன் பயனும் மழை பெய்கின்ற மேகமும் அப்பெருமானே ஆகும்.

பாடல் விளக்கம் : 7

மண்ணுலகத்திலும் விண்ணுலகத்திலும் வாழ்கின்ற பலரும் இப்பெருமானே அறியாதிருக்க அருள் செய்பவன் என்று அறியாதிருக்கின்றனர்.

பாடல் விளக்கம் : 8.

திருமால், நான்முகன் முதலிய தேவர்களும் இவனை எண்ணத்தில் நிறுத்தி நினையாதிருக்கின்றனர். வானத்தில் விரிந்து விளங்கும் பெருமானை மண்ணவர் கடந்து போய் அறிய முடியவில்லை.- ஆகவே, மண்ணில் கலந்தும் எல்லாவற்றையும் கடந்தும் விளங்குகின்றான்.

பாடல் விளக்கம் : 9

நான்முகன், திருமால் ஆகியோர் அடி முடி காணச் சென்றதன் - அடியைக் கண்டேன் என்று அச்சுதன் சொல்ல - முடியைக் கண்டேன் என்று நான்முகன் கூற - பொய்மொழிந்தானே.

பாடல் விளக்கம் : 10.

சிவபெருமான் சுவாதிட்டானம் எனும் மலரில் விளங்கும் நான்முகனைக் கடந்து விளங்குகிறான் - திருமாலைக் கடந்துள்ளான் - அநாகதச் சக்கரத்தில் உள்ள உருத்திரனைக் கடந்துள்ளான்.

## வினாக்கள்

ஒரு சொற்களில் விடையளி:

1. திருமந்திரத்தை இயற்றியவர் யார்?
2. திருமந்திரம் எத்தனை தந்திரங்களைக் கொண்டுள்ளது?

சுருக்கிய விடையளி:

1. திருமந்திரம் - குறிப்பு வரைக.
2. திருமூலர் - குறிப்பு வரைக.
3. "உள்ளவனும் இல்லவனும் ஆவான்" - எங்ஙனம்?

விரிவான விடையளி:

1. திருமூலரின் சிவபரத்துவம் கூறும் சிவபெருமானின் சிறப்புக்களைத் தொகுத்துரைக்க.

# 5. திருவருட்பா - அருள் விளக்கமாலை

- வள்ளலார்.

## நூற்குறிப்பு :

திருவருட்பாவை இயற்றியவர் இராமலிங்க அடிகளார். அருள் விளக்க மாலை திருவருட்பாவின் ஆறாந் திருமுறையில் உள்ளது. இந்தத் திருவருட்பாத் திருமுறையே, கடவுளின் மெய்யருள் உண்மையை வழங்க வந்ததேயாகும்.

## ஆசிரியர் குறிப்பு :

சிதம்பரத்திற்கு அருகே மருதூரில் பிறந்தவர். இளமையிலேயே தெய்வத் திருவருள் பெற்றவர். பல தெய்வங்களைப் பாடியிருப்பினும் ஆன்மநேய ஒருமைப்பாட்டையும் சமரச சன்மார்க்கத்தையும் பெரிதும் வலியுறுத்துபவர். ஜோதி வடிவில் இறைவனைக் கண்டவர். "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்ற அருள் உணர்வைப் பெற்றவர். இவருடைய பாடல்களின் தொகுப்பு திருவருட்பா எனப்படும்.

## அருள் விளக்கமாலை

### பாடல் விளக்கம் : 1.

கோடை வெயிலில் குளிர்ந்த மரமாகவும் - அம்மரத்தின் நிழலாகவும் - இன் சுவை நீர் ஓடையாகவும் - மணமிக்க - இன் சுவை நற்கனியாகவும் - தென்றல் வீசவும் - மகிழ்ச்சி மலராகவும் - பசும் புல் மேடையாகவும் - உண்டாகிறது. இது போன்று இருக்கின்றதாம் இறைவனுடன் இணைந்து இருக்கையில்.

### பாடல் விளக்கம் : 2.

வறுமையில் வாடாது இன்புற்று வாழ்வதற்கு முன்னோர்பாடாய் சேகரித்து வைக்கும் பெரும் நிதியம் போன்றவன் - பலவீனமான நேரத்தில் பெரும் துணையானவன் - பசிப்பிணி போக்கி உயிர்த் தெளிவளிக்கும் பொருளாம் அறியாமை இருளைப் போக்கி அறிவு ஒளியை வழங்குபவன் - வேதனை நீங்கா இளம் பருவத்தே வந்து என்னை அருள் மணம் புரிந்து கொண்டுள்ளவன் நல்லோர்க்கெல்லாம் இன்பு செய்பவனே நல் வேந்தனானவன்.

### பாடல் விளக்கம் : 3

அன்பினால் கசிந்துருகும் அன்பர் உள்ளமாகிய கோயிலில், அவர்கள் கண்டு தொழுதேத்தி அருள் பெற்றுய்யவே திருநடனம் புரிகின்றார். இரக்கமே வடிவான நம் அடிகளாரும் தம் உள்ளக் கோயிலில் இவ்வருள் நடனத்தினைக் கண்டு துதிசெய்து வருகின்றார்.

பாடல் விளக்கம் : 4.

அருள் என்னும் நிதி கொண்டு - வாட்டமற்று தேட்டமுடன் வாழமுடியும் - தனக்கு வாழ்வளித்த நிதியே - கோபமுடைய கோரமுகத்தைக் கண்டு திகைப்புற்ற தருணம் - துணிவும், திண்மையும், மகிழ்ச்சியும் உண்டாக்க உதவுகின்றாய் - அடி முடி காட்சியைப் பற்றி கூறுகின்றார்.

பாடல் விளக்கம் : 5

வருந்திய என் வருத்தத்தையெல்லாம் தவிர்த்தவன் - என் உள்ளத்தின் பெருமகிழ்ச்சி - செங்குவளை மாலையோடு மல்லிகைப்பூ மாலை சேர்த்தணிந்த தெய்வமணவாளா - எங்கும் ஒளி மயமானவன் - மெய்ப்பொருளானவன் உனக்கு சொல் மாலை சூட்டுவேன் என்கிறார்.

## வினாக்கள்

ஓரிரு சொற்களில் விடையளி :

1. வள்ளலார் எங்கு பிறந்தார்?
2. வள்ளலார் இறைவனை எவ்வழியில் கண்டார்?
3. "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடியவர்" - யார்?

குறுகிய விடையளி :

1. வள்ளலார் சிறப்பு வரைக.

விரிவான விடையளி :

1. வள்ளலார் இறைவனின் மெய்யருள் உண்மையை எங்ஙனம் எடுத்துரைக்கின்றார்?
2. அருள் விளக்கமாலை தரும் கருத்துக்களை நும் பாடப்பகுதி கொண்டு விளக்குக.